**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**

**திருவண்ணாமலை மாவட்டம்.**

**அசல் வழக்கு எண்.54/16**

2023-ம் ஆண்டு மார்ச் திங்கள் 02-ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய திருமதி.வசந்தா, என்பவரின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திரு.உதயகுமார், உதவியாளர் என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | - திருமதி.வசந்தா. |
| வயது | - |
| தந்தை/கணவர் பெயர் | - க.பெ.குப்பன் |
| கிராமம் | - கிளார் |
| வட்டம் | - |
| சாதி | - |
| சமயம் | - |
| தொழில் | - |

02.03.2023

வா.சா. 1

11, 12 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

குப்பனின் முதல் மனைவி பெயர் லட்சுமி. லட்சுமி எப்போது இறந்தார் என்று எனக்கு வருடம் தெரியவில்லை. அவர் இறந்து 3 மாதம் கழித்து எனக்கு திருமணம் ஆனது. லட்சுமியின் இறப்பு சான்றிதழ் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. எனக்கு திருமணம் நடந்த தேதி, வருடம் எனக்கு நினைவு இல்லை. குப்பன் இறந்த தேதி, வருடம் எனக்கு தெரியவில்லை. சுமார் 15 வருடம் முன்பு இறந்திருப்பார். தாவா சொத்து குப்பனுக்கு பாத்தியப்பட்ட சொத்து. தாவா சொத்துக்கள் குப்பன் சுயமாக சம்பாதித்த சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல. அவரது தகப்பனாரும், அவரது பாட்டனாரும் சம்பாதித்த சொத்துக்கள். தாவா சொத்து குப்பனின் பூர்வீக சொத்து என்பதை காட்டுவதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன்.

2) நான் எத்தனை நபர்கள்மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் குடும்பத்தில் நான் எங்கள் பிள்ளைகள்மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன். முதல்தாரம் பிள்ளைகள்மீதும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். குப்பன் இறந்த பிறகு அவரது வாரிசுகள் யார் யார் என்பதற்கு ஆதரவாக வாரிசு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வதுபோல் வாரிசு சான்றித்ழ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

11, 12 பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.